DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 99/2023

Miscellaneous :

Sessions : DW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | நித்யா |
| Father / Husband Name | பிரகாஷ் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 14.07.2025

**முதல் விசாரணை**

**1.** நான் கனரா வங்கி, மதுராந்தகம் கிளையில் துணை மேலாளராக பணிபுரிகிறேன். **(எதிரியுடைய வங்கி கணக்கின் அக்கௌண்ட் ஸ்டேட்மெண்ட் சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** என்னிடம் காட்டப்படும் வழக்கு காசோலை எங்கள் வங்கியின் காசோலை தான். அது CTS செக் ஆகும். அந்த காசோலை எந்த ஆக்ஸிஸ் பேங்கில் கலெக்ஷனுக்கு போடப்பட்டுள்ளது. ஆக்ஸிஸ் பேங்க் கலெக்ஷனுக்கு போடும்போது எங்களுக்கு செக்கின் இமேஜை ஸ்கேன் செய்து அனுப்புவார்கள். பொதுவாக செக்கின் முன் பகுதி மட்டும் தான் ஸ்கேன் செய்து வரும். CTS செக்கை அனுப்பும்போது பெயர், தொகை எண்ணாலும் எழுத்தாலும், தேதி ஆகியவற்றில் திருத்தம் இருக்கக்கூடாது அவ்வாறு திருத்தம் இருந்தால், செக்கை கொடுக்கும் நபர் கையெழுத்து செய்யவேண்டும்.

2. பொதுவாக கலெக்டிங் பேங்க் செக்கை வாங்கும்போதே மேற்கண்ட விவரங்களை சரிபார்த்துதான் வாங்குவார்கள். இந்த வழக்கு காசோலையில் D.கண்ணதாசன் என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த T என்பது D–யாக மாற்றப்பட்டுள்ளது. காசோலையின் பின் பக்கத்தில் Name Mismatch Confirmed என்று உள்ளது. Name Mismatch ஆன காசோலையை எவ்வாறு கையாலவேண்டும் என்றால் காசோலையை வழங்கிய நபர் தான் பெயரை மாற்றி எழுதியுள்ளார் என்பதை உறுதிசெய்ய வேண்டும். இந்த வழக்கில் அவ்வாறு உறுதிசெய்யப்படவில்லை. வழக்கு காசோலையில் 11.04.2023 என்று தேதியிடப்பட்டுள்ளது. அதன் பின்புறம் 11.03.2023 என்று ஆக்ஸிஸ் பேங்கின் முத்திரை போடப்பட்டுள்ளது. அதை தவிர காசோலையில் வேறு தேதிகள் எதுவும் இல்லை. காசோலையில் ஆக்ஸிஸ் பேங்கின் முத்திரை ஒன்றன்மீது ஒன்றாக இரண்டு முறை செய்யப்பட்டுள்ளது. CTS செக் 5 லட்சத்திற்கு மேல் தாண்டும்போது அதை கவனமாக கையால வேண்டும்.

3. வழக்கு காசோலையின் பின்பக்க புகைபடமும் வந்திருந்தால் நாங்கள் இந்த காசோலையை கலெக்ஷனுக்கு எடுத்திருக்கமாட்டோம். மேலும் காசோலையை 11.04.2023 என்று தேதியிடப்பட்டு உள்ளது. ஆனால், அதை 11.03.2023 அன்றே

கலெக்ஷனுக்கு போடப்பட்டுள்ளது. Name Mismatch உறுதி செய்யப்பட்டிருந்தால் அதை நாங்கள் ரிட்டன் செய்திருப்போம். இந்த வழக்கு காசோலை RBI வழிகாட்டுதலின்படி Invalid செக்.

**குறுக்கு விசாரணை**

**4.** ஆக்ஸிஸ் பேங்க் RBI வழிகாட்டுதலின்படி நடந்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். காசோலையில் ஆக்ஸிஸ் வங்கியின் முத்திரை எதனால் இரண்டு முறை போடப்பட்டுள்ளது என்று அந்த வங்கியின் அதிகாரிகளை விசாரித்தால் தான் தெரியவரும் என்றால் சரிதான். பொதுவாக காசோலையின் பின்பக்கம் எங்களுக்கு ஸ்கேன் ஆகி வராது என்றால் சரிதான். அதனால் இந்த காசோலையை எங்களால் திருத்தப்பட்டிருக்க முடியாது என்றால் பெயர் ஒத்துப்போகாததால் திருப்பப்பட்டிருக்கும். RBI வழிகாட்டுதலின்படி பெயர், தொகை மற்றும் தேதியை மட்டும் சரிபார்க்க வேண்டும்என்றாலும் சரியல்ல, பெயர் இனிஷியலையும் உள்ளடக்கியது. RBI வழிகாட்டுதலில் இனிஷியலை பற்றி குறிப்பிட்டு எந்த வழிகாட்டுதலும் இல்லை என்றால் சரிதான். இனிஷியலில் மேல் கோடு மட்டும் தான் மீண்டும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். T என்பது D யாக மாற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

5. எதிரி எங்கள் வங்கியில் எத்தனை ஆண்டுகளாக கணக்கு வைத்துள்ளார் என்றால் 2018 ஆண்டுக்கு முன்பிருந்தே வைத்துள்ளார். எப்போதிலிருந்து வைத்துள்ளார் என்பதை பார்த்து தான் சொல்லமுடியும். இந்த வழக்கு காசோலை 20.03.2018 அன்று எங்கள் வங்கியால் வழங்கப்பட்டுள்ளது. இந்த காசோலை 40 காசோலைகளை கொண்டது. இந்த வழக்கு காசோலை இல்லாமல் காசோலை எண். 854848 என்ற எதிரியின் காசோலையும் திருப்பப்பட்டுள்ளது. அதன் தொகை ரூ.1 லட்சம். வேறு எதிரியின் காசோலை எதுவும் திருப்பப்பட்டுள்ளதா என்றால் இல்லை. காசோலையின் பின்புறம் ஏன் 11.03.2023 என்று நிரப்பப்பட்டுள்ளது என்பதை ஆக்ஸிஸ் வங்கியின் ஊழியர்களை விசாரித்தால் தான் தெரியவரும் என்றால் சரிதான்.

**புகார்தாரர் தரப்பில் மறுவிசாரணை**

**6.** இந்த வழக்கு காசோலையின் பெயர் Mismatch ஆகியுள்ளதா என்றால் இல்லை. Initial Mismatch தான் பெயர் Mismatch என்று போடப்பட்டுள்ளது. Initial தவறாக இருந்தால் Account–ல் உள்ள பெயர் ஒத்துப்போகாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணையை பொறுத்து குறுக்கு விசாரணை**

7. இந்த வழக்கு காசோலையில் Initial Mismatch என்று தான் உள்ளது. பெயர் Mismatch என்று இல்லை. T–யை D–யாக மாற்றியதாக நான் தவறாக கூறுகிறேன் என்றாலும் அதற்குரிய வல்லுநரை விசாரித்தால் தான் இது தெரியவரும் என்றால் சரியல்ல.